மாநில அளவிலான குடியரசு தின தடகளப் போட்டிகளில் கலந்து கொள்ளும் தங்கள் மாவட்ட பள்ளி மாணவ மாணவிகளை கீழ்காணும் அறிவுரைகளை பின்பற்றி உரிய ஆவணங்களுடன் உரிய நாளில், தவறாது கலந்து கொள்ளச் செய்யுமாறு கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அணி மேலாளர்கள் கவனத்திற்கு**

- ஒவ்வொரு ஆண்டிலும் ஜுலை 1 ஆம் தேதி அன்று அமலில் இருக்கும் கூட்டமைப்பு விதிகள் பின்பற்றப்படும்.
- போட்டிகளில் பங்கு பெறும் வீரர்கள் தனி நபர் அடையாள அட்டையுடன் போட்டி ஆரம்பிப்பதற்கு 45 நிமிடங்களுக்கு முன்பாக போட்டி நடைபெறும் இடத்திற்கு வருகை புரிதல் வேண்டும்.
- அணி மேலாளர்கள்/ நடுவர்களுக்கான கூட்டம் 23.10.2025. அன்று காலை 11:00 மணிக்கு முதன்மை உடற்கல்வி ஆய்வாளர்கள் தலைமையில் போட்டி நடைபெறும் அன்னை சத்யா விளையாட்டரங்கில் நடைபெறும்.

- போட்டிகள் 24.10.2025 அன்று காலை 7.00. மணியளவில் துவங்கவுள்ளதால், அதன் பின் காலதாமதமாக வருகை தரும் போட்டியாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- குடியரசு தின தடகளப் (RDS) போட்டிகளுக்கு மேலாளராக மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அவர்களால் நியமிக்கப்படும் நபர்கள் மட்டுமே அணி மேலாளராக செயல்பட முடியும்
- உடற்கல்வி இயக்குனர் , ஆசிரியர் மட்டுமே அணி மேலாளராக செயல்படலாம்
- மாணவ மாணவியரின் பெற்றோர் / பயிற்சியாளர் [ PARENTS / COACHES ] அணி மேலாளராக செயல்பட அனுமதிக்கப்பட மாட்டாது
- அணி மேலாளர்கள் தங்களின் பணி ஒதுக்கீட்டு ஆணை மற்றும் துறை சார்ந்த அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும்.
- போட்டிகளுக்கு வீரர்கள் வீராங்கனைகளை பாதுகாப்பாக குறித்த நேரத்தில் அழைத்து வந்து போட்டிகளில் பங்கு பெற செய்வது அணி மேலாளர்களின் கடமை .
- போட்டி நடைபெறும் இடங்களில் மாணவர்களை தனது முழு கண்காணிப்பில் வைத்திருக்க வேண்டும்.
- போட்டி முடிந்தவுடன் மாணவர்களை பாதுகாப்பாக திரும்ப அழைத்துச் செல்வது அணிமேலாளர்களின் முக்கிய கடமையாகும்.
- மாணவ மாணவிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு நீர்நிலைகள் சுற்றுலா தலங்கள் மற்றும் ஆபத்தான இடங்களுக்கு அழைத்துச் செல்வதை அணி மேலாளர்கள் முற்றிலும் தவிர்க்க வேண்டும்.
- விலை உயர்ந்த ஆபரணங்கள் பொருட்களை எடுத்து வருவதை தவிர்த்தல் வேண்டும்.
- மழைக் காலமாக இருப்பதால் தங்கும் இடத்தில் தங்களுக்கு தேவையான படுக்கை போர்வை வசதிகளை தாங்களே கொண்டு வருதல் வேண்டும்
- மாணவிகளின் அணி மேலாளராக பெண் உடற்கல்வி இயக்குனர் , ஆசிரியர் மட்டுமே இருத்தல் வேண்டும் கட்டாயமாக பெற்றோர்களுக்கு அனுமதி இல்லை.

- விளையாட்டு அரங்கத்திற்குள் போட்டியாளர்கள் மட்டுமே அனுமதிக்கப் படுவர்.
- தங்குமிடத்தில் மாணவ/ மாணவிகளுடன் அணிமேலாளர்கள் தங்கி மாணாக்கர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். மாணவிகளுடன் பெண் அணிமேலாளர்கள் தங்குவது கட்டாயமாகும்.
- எந்தவித புகார்களுக்கும் இடம் அளிக்காமல் மிகுந்த கவனத்தோடு அணி மேலாளர்கள் பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும்
- வீரர்கள் வீராங்கனைகளின் பொருட்களின் பாதுகாப்பு வீரர்கள் வீராங்கனைகளின் பொறுப்பு மட்டுமே ஆகும். தங்கள் அறைகளை பூட்டுவதற்கு .பூட்டு மற்றும் சாவிகள் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளே கொண்டு வருதல் வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)
தஞ்சாவூர்.

16/10/2023

நகல்:-

1. இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித்திட்டம்), சென்னை-06 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.